PUBLIC EXAMINATION

# 2001 TAMIL

STUDENT/ REGISTRATION NUMBER

CENTRE NUMBER

STATE/ TERRITORY

Pages: 10

## EXTENDED LEVEL

## Paper 1: Processing Spoken Information

**Tuesday 23 October: 2 p.m. Eastern Standard Time**

Time: 1 hour

*Approved English–Tamil/Tamil–English or monolingual dictionaries may be used.*

### Instructions to Candidates

1. You will have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the tasks.
2. Write all your responses to the tasks in Paper 1 in this booklet in ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You are required to respond to both Part A and Part B.
4. Part A may be answered either **ALL** in Tamil or **ALL** in English. Part B must be answered in Tamil.
5. Make sure that you write your student/registration number, State or Territory in which the examination is taken, and centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.
7. The assessment criteria for this paper are printed on the back page of this booklet.

This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the Senior Certificate (Queensland), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).

© *Victorian Curriculum and Assessment Authority 2001*

www.theallpapers.com

www.theallpapers.com

## அறிவுறுத்தல்

இச் செயற்பாட்டில் இரு பிரிவுகள் உண்டு – பிரிவு "A" பிரிவு "B". பிரிவு "A" க்கு நீர் முழுமையாகத் தமிழிலோ அல்லது முழுமையாக ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும். பிரிவு "B" க்கு தமிழில் மாத்திரம் விடையளிக்க வேண்டும்.

உமக்கு இரண்டு கேட்டல் பகுதிகள் ஒலிபரப்பப்படும். ஒலிநாடாவைக் கேட்கும் போதே பிரிவு "A" பிரிவு "B" க்கான செயற்பாட்டைச் செய்வதற்கு உதவியாக உமக்குத் தரப்பட்ட தாள்கள் இரண்டிலும் குறிப்புக்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**பிரிவு "A": இரண்டு கேட்டல் பகுதிகளுக்குமான செயற்பாடுகள்**

நீர் இப்பொழுது ஒலிப்பதிவு செய்யப்பட்ட முதலாம் பகுதியைக் கேட்கப் போகிறீர். மூன்று நிமிடங்களின் பின் இப்பகுதியைத் திரும்பக் கேட்பீர். இப்பகுதிக்கான செயற்பாட்டைச் செய்வதற்கு 5 நிமிடங்கள் தரப்படும். நீர் முழுமையாகத் தமிழிலோ அல்லது முழுமையாக ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும்.

பின்பு நீர் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இரண்டாம் பகுதியைக் கேட்கப் போகிறீர். இப்பகுதியையும் மூன்று நிமிடங்களின் பின் மீண்டும் திரும்பக் கேட்பீர். இப்பகுதிக்கான செயற்பாட்டைச் செய்வதற்கு 5 நிமிடங்கள் தரப்படும். நீர் முழுமையாகத் தமிழிலோ அல்லது முழுமையாக ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும்.

இச்செயற்பாடுகள் இரண்டும் பிரிவு "A" க்கு உரியவை.

இதன் பின்பு பிரிவு "B" க்கான செயற்பாட்டைச் செய்யத்தொடங்க வேண்டும்.

**பிரிவு "B": இரண்டு கேட்டல் பகுதிகளையும் உள்ளடக்கிய செயற்பாடு**

இதற்கான செயற்பாடு இரண்டு பகுதிகளிலும் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே நீர் செயற்பாட்டில் ஈடுபடும்போது உமக்கு உதவும் முகமாக மீண்டும் இரண்டு பகுதிகளையும் கேட்க வாய்ப்புத் தரப்படும். இச் செயற்பாட்டைத் தமிழில் செய்ய வேண்டும்.

## *INSTRUCTIONS*

*There are two parts to this task, Part A and Part B. In Part A you may respond either ALL in English or ALL in Tamil. In Part B you must respond in Tamil.*

*Two passages of spoken information will be played to you. While you are listening to each of these you should make notes on the pages provided to help you complete both Part A and Part B.*

***Part A: Tasks on the Two Spoken Passages***

*You will hear a recorded passage. After 3 minutes the passage will be repeated. You will then have 5 minutes to complete the task based on that passage. Respond either ALL in English or ALL in Tamil.*

*You will then hear a second passage. After 3 minutes the passage will be repeated. You will then have 5 minutes to complete the task based on that passage. Respond either ALL in English or ALL in Tamil.*

*These two tasks are the requirements for Part A.*

*You should then begin working on Part B.*

***Part B: Task Drawing on Both Passages***

*Part B consists of a task based on the information in both passages. You must complete this task in Tamil. To help you, you will hear both passages again while you are working.*



www.theallpapers.com

## Part A: Tasks on the Two Spoken Passages CLICK HERE

நீர் **முழுமையாகத்** தமிழிலோ அல்லது **முழுமையாக** ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும்.
*Respond either ALL in Tamil or ALL in English.*

**பகுதி *1***

முதலாவது பகுதியைக் கேட்டு இச் செயற்பாட்டைப் பூரணப்படுத்துக.

கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. கலைவிழா ______________ மாதம் ______________ ஆம் திகதி ______________ மணிக்கு ______________________ மண்டபத்தில் கொண்டாடப்படுகின்றது.

2. கலைவிழா ______________________________ ஆல் ஒழுங்கு செய்யப்படுகிறது.

3. ______________________________________ ஐ முன்னிட்டு இக்கலைவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

4. இக் கலைவிழாவில் பேராசிரியர் பாண்டியன் ______________________ ஆகக் கலந்து கொள்ளச் சம்மதித்துள்ளார்.

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

***Passage 1*** CLICK HERE

*Listen to the first passage and complete this task.*

*Fill in the blank spaces.*

1. *The Arts festival will be held on* ______________________ *the* ______________________ *at* ________________ *and the venue will be* ________________________________________ .

2. *The Arts festival is being organised by* ____________________________________________ ______________________________________________________________________________ .

3. *This Arts festival is held on a grand scale in order to celebrate* ________________________ ____________________________________________ .

4. *Professor Pandian has agreed to be the* ____________________________ *at this Arts festival.*

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

**பகுதி 2**

இரண்டாவது பகுதியைக் கேட்டு இச் செயற்பாட்டைப் பூரணப்படுத்துக.

குறிப்புத்தாளில் விபரங்களைக் குறித்துக் கொள்க.

| விழா நிகழ்ச்சிகள் |
|---|
| • |
| • |
| • |
| • |
| • |

| நுழைவுச்சீட்டு விபரங்கள் |
|---|
| • |
| • |
| • |

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

***Passage 2*** CLICK HERE

*Listen to the second passage and complete this task.*

*Make notes on the note pad.*

| *Items in the program* |
|---|
| • |
| • |
| • |
| • |
| • |

| *Ticket details* |
|---|
| • |
| • |
| • |

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

## Part B: Task Drawing on Both Passages

தமிழில் விடை அளிக்கவும்./*Respond in Tamil.*

நீர் அவுஸ்திரேலிய இந்தியக் கலைஞர் கூட்டமைப்பின் காரியதரிசியாக உள்ளீர். அண்மையில் நடக்கவிருக்கும் இக் கலைவிழாவிற்கு, பலரினதும் ஆதரவுகிடைக்கும் வகையில் அமையும் வானொலி அறிவிப்பை எழுதுமாறு உம்மைக் கேட்டிருக்கிறார்கள். ஒலிப்பதிவு செய்யப்பட்ட இரு பகுதிகளிலும் இருந்து பெறப்பட்ட தகவல்களை **மட்டுமே** பயன்படுத்தி, விழாவில் இடம் பெற இருக்கும் முக்கிய அம்சங்களை எடுத்துக்கூறும் அறிவிப்பினை 120–150 சொற்களில் எழுதுக.

*You are the secretary of the Federation of Australian Indian Artists. You have been asked to write the script for the radio announcement promoting the forthcoming Arts festival. Using ONLY information from the two recorded texts, write the script of the announcement, highlighting important details about the Arts festival in 120–150 words.*

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

www.theallpapers.com

www.theallpapers.com

# 2001 TAMIL

## EXTENDED LEVEL

## Paper 1: Processing Spoken Information

| **Part A – Assessment Criteria** |
|---|
| • † **the capacity to select and use relevant information** |

| **Part B – Assessment Criteria** |
|---|
| • † **the capacity to select and use relevant information** |
| • **form and organisation**<br>† *observation of the conventions of the discourse form (for example, format, style, cultural appropriateness)*<br>† *linking of related ideas*<br>† *organisation of information from sources into a meaningful sequence* |
| • **effective expression**<br>† *control of the language required to complete the task (appropriateness, clarity of expression, including accuracy in the use of linguistic elements)*<br>† *degree of independence from the wording of the original information* |

www.theallpapers.com

NATIONAL ASSESSMENT FRAMEWORK FOR LANGUAGES AT SENIOR SECONDARY LEVEL

PUBLIC EXAMINATION

# 2001 TAMIL

| | | |
|---|---|---|
| STUDENT/ REGISTRATION NUMBER | | Pages: 10 |
| CENTRE NUMBER | | |
| STATE/ TERRITORY | | |

## EXTENDED LEVEL

## Paper 2: Part A: Writing in Tamil
## Part B: Reorganising Written Information

**Tuesday 23 October**

Time: 1 hour and 30 minutes

*Approved English–Tamil/Tamil–English or monolingual dictionaries may be used.*

**Instructions to Candidates**

1. Write all your responses to the tasks in Paper 2 in this booklet in ink or ball-point pen. Space is provided for you to make notes.
2. You are required to respond to both Part A and Part B.
3. Make sure that you write your student/registration number, State or Territory in which the examination is taken, and centre number (if required) on the front cover of this booklet.
4. All question booklets will be collected at the end of the examination.
5. The assessment criteria for this paper are printed on the back page of this booklet.

This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the Senior Certificate (Queensland), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).

© *Victorian Curriculum and Assessment Authority 2001*

www.theallpapers.com

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

## Part A: Writing in Tamil

பின்வரும் செயற்பாடுகளில் **ஒன்றைத்** தெரிவு செய்து 150–200 சொற்களில் தமிழில் பூரணப்படுத்துக.

*Choose ONE of the following tasks and complete it, writing about 150–200 words in Tamil.*

1. உமது பாடசாலைச் சஞ்சிகையில் பாடசாலை வாழ்க்கை சம்பந்தமான விடயங்கள் பற்றிய கட்டுரைத்தொடர் வெளியிடப்படுகிறது. இத்தடவை நட்பு என்னும் விடயம் பற்றி வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உயர்தர மாணவராய் இருக்கும் நீர், **நல்ல நண்பர்களிருப்பது ஏன் முக்கியம்?** என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதத் தீர்மானிக்கிறீர். உமது கட்டுரையை 150–200 சொற்களில் எழுதுக.

2. அவுஸ்திரேலிய தமிழ்ச்சங்கம் வருடா வருடம் நடாத்திவரும் சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற நீர் தீர்மானிக்கிறீர். நீர் பறக்கக் கூடிய வகையில், உமக்கு **மாயச்சிறகுகள் இரண்டு கிடைத்தன** எனக் கற்பனை செய்து, நீர் அதனால் அடைந்த இன்ப துன்பங்களை அடிப்படையாகக் கொண்டு, உமது சிறுகதையை அமைக்கிறீர். உமது சிறுகதையை 150–200 சொற்களில் எழுதுக.

3. நீர் ஒரு விளையாட்டுப் பிரியர். வருடா வருடம் நடை பெறும் தமிழர் விளையாட்டு விழாவிற்கு நீர் செல்லத் தவறுவதில்லை. இவ்வருடம் உமது மாநிலத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவைப் பாராட்டி, தமிழ் பத்திரிகை ஒன்றிற்கு கடிதம் எழுதவுள்ளீர். அக் கடிதத்தை 150–200 சொற்களில் எழுதுக.

4. தமிழ்ப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. நீரும் இத்தகைய முரண்பாடுகளை அனுபவித்திருக்கிறீர். எனினும், உமது பெற்றோரின் சில அறிவுறுத்தல்கள் நல்ல வகைகளில் உமக்குப் பயன்பட்டுள்ளன என்று உணர்கிறீர். ஓர் இளைஞர் சங்கக் கூட்டத்தில் உமது அனுபவங்களை மற்றைய இளைஞர்களுடன் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் உமக்குக் கிடைத்துள்ளது. நீர் வழங்க இருக்கும் பேச்சினை, 150–200 சொற்களில் எழுதுக.



www.theallpapers.com

செயற்பாட்டு இல./*Task No.*:



www.theallpapers.com

www.theallpapers.com

## Part B: Reorganising Written Information

உமக்கு மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள தகவல்களை **மட்டுமே** கொண்டு கீழே தரப்பட்டுள்ள செயற்பாட்டை 120–150 சொற்களில் தமிழில் செய்யவும்.

இளைஞர்களுக்கான சஞ்சிகை ஒன்றில் பிரசுரிப்பதற்கு, 'விளையாட்டு–இன்றும் எதிர்காலத்திலும்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கை எழுதுக. விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு நிதி ஆதரவு பெறுவது ஏன் அவசியம், அதனைப் பெறுவதற்கு சிறந்த வழி என்ன என்பவற்றை உமது அறிக்கையில் விளக்குக. உமக்குத் தரப்பட்ட மூன்று உரைப்பகுதிகளிலும் இருந்து பெற்ற தகவல்களை மட்டுமே கொண்டு உமது அறிக்கையை எழுதுக.

*There are three different texts. Using ONLY information from the material provided, complete the task in Tamil in 120–150 words.*

*Write a report to publish in a young people's magazine on the topic 'Sport today and in the future'. Explain why it is important to obtain sponsorship for sporting activities and how this can best be achieved. Write your report using information ONLY from the following three texts.*

***Text 1***

**ஒரு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி**

வயது, பால், இனம், தொழில் என்னும் வேறுபாடின்றி, எல்லா மக்களும் விளையாட்டு நிகழ்ச்சிகளை விரும்புவர். இத்தகைய நிகழ்ச்சிகளால், தத்தம் விளையாட்டுக் குழுக்களை ஆதரிப்போரிடையே நெருக்கமான ஒருங்குணர்வும் ஒற்றுமையும் ஏற்படுகின்றன. மிகுந்த நிதி ஆதரவின்றி விளையாட்டு நிசழ்ச்சிகள் பலவற்றை நடாத்த இயலாது. இன்றைய விளையாட்டு நிகழ்ச்சிகள் சிறப்பாய் அமைய வேண்டுமெனில், யாவர்க்கும் உற்சாகமூட்டுவனவாயும், சர்வதேச பங்களிப்புடையனவாயும் அமைதல் வேண்டும். மேலும் இந்நிகழ்ச்சிகளுக்குப் பெருந்திரளாக வரும் பார்வையாளருக்கு ஆசன வசதிகளும், பாதுகாப்பு ஒழுங்குகளும் செய்து தருதல்வேண்டும். இவை யாவற்றையும் செய்வதற்கு மிகுந்த பொருள் வசதி வேண்டும். தாராளமாக உதவக்கூடிய வர்த்தக அமைப்புகளின் ஆதரவின்றி, இந்த அளவிலான நிகழ்ச்சிகளை ஒழுங்காய் நடாத்த முடியாது.



www.theallpapers.com

*Text 2*

அன்புள்ள ஆசிரியருக்கு,

விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு, புகையிலை ஸ்தாபனங்களும் சில நாடுகளில் அனுமதிக்கப்படுகின்றன. மக்களின் உடல் நல அழிவிற்குக் காரணமான புகையிலைப் பழக்கத்தை ஊக்குவிக்கும் இந்த ஸ்தாபனங்களால், அவுஸ்திரேலியர்களுக்கும், குறிப்பாக அவுஸ்திரேலிய இளைஞர்களுக்கும் கெடுதி ஏற்படுகிறது என்பதில் ஐயமில்லை. இதனை உங்களது பத்திரிகை மூலம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வெளி நாடுகளில் பெரும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம், பிரபல புகையிலை ஸ்தாபனங்கள் அந்த நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் காட்டப்படும் போது, தாமும் விளம்பரம் பெறுகின்றன. பிற நாடுகளில் நடைபெறும் விளையாட்டு நிகழ்ச்சிகள் அவுஸ்திரேலியாவில் ஒளிபரப்பப்படும் பொழுது, புகையிலை வியாபாரிகள் அவுஸ்திரேலியாவிலும் தங்கள் சிகரெட்டுகளை விளம்பரப்படுத்தும் வாய்ப்பைப் பெறுகின்றனர். புகையிலை ஸ்தாபனங்கள் இவ்வாறு பின் கதவால் இங்கு விளம்பரம் செய்வது பற்றி, அரசாங்கங்கள் விழிப்பாயிருத்தல் அவசியம்.

இந்த விளம்பரங்களில் இருந்து எமது இளைஞர்களுக்குக் கிடைக்கும் செய்தி என்ன? புகைப்பது அவ்வளவு பிழையான காரியமில்லை என்று அவர்கள் நினைக்கலாம். வேகம், அதிகாரம், அந்தஸ்து போன்றவற்றுடன் புகைப்போர் ஏதோ வகையில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் அவர்களுக்குத் தோன்றும். புகைத்தலுக்கும் விளையாட்டு வீரர்களின் உடல் வலிமைக்கும் ஏதோ தொடர்பு உண்டு என்று அவர்கள் எண்ணுவர். புகைக்கும் பழக்கத்திற்குப் பலர் அடிமையாவதையும், அதனால் நோயும் மரணமும் ஏற்படுவதையும் அவர்கள் யோசிப்பதில்லை.

விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆதரவு தரக்கூடிய வேறு எத்தனையோ வர்த்தக ஸ்தாபனங்கள் உள்ளன. பெருந்தொகையான மக்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் பொருள் ஒன்றை விளம்பரப்படுத்துவதற்கு அரசாங்கங்கள் வசதி செய்ய வேண்டியதில்லை.

உண்மையுள்ள,

கண்ணன்

எப்பிங்
27.04.01



www.theallpapers.com

*Text 3*

**ஒரு துண்டுப் பிரசுரத்தில் இருந்து பெறப்பட்ட பகுதி**

**சர்வதேச வணிகத்தால் அனைவரும் பயன் பெறுவதற்கு உதவுங்கள்!**

**இந்த ஸ்தாபனங்களையே ஆதரியுங்கள்!**

இத் துண்டுப்பிரசுரத்தில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள ஸ்தாபனங்கள்:

- சூழல் மாசுபடாது பேணுவன.
- உயிரினங்களைப் பரிசோதனைகளில் பயன்படுத்துவதில்லை.
- சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை.
- தீங்கு தரும் இரசாயனப்பொருட்களைத் தாம் உற்பத்தி செய்வனவற்றில் கலப்பதில்லை.
- நியாயமான சம்பளம் கொடுப்பவர்கள்.

**குறிப்புகள்/*Notes***



www.theallpapers.com

www.theallpapers.com

www.theallpapers.com

# 2001 TAMIL

## EXTENDED LEVEL

**Paper 2: Part A: Writing in Tamil**
**Part B: Reorganising Written Information**

| Part A – Assessment Criteria |
|---|
| • **the capacity to deal with the chosen topic**<br>† *breadth of treatment*<br>† *suitability of the writing for the topic and/or purpose*<br>† *maintenance of the reader's interest* |
| • **form and organisation**<br>† *observation of the conventions of the discourse form (style, sequencing, cultural appropriateness) and specifications regarding length*<br>† *organisation of content* |
| • **clarity of expression**<br>† *control of the language required by the topics, including accuracy in the use of linguistic elements* |
| • **variety and appropriateness of vocabulary and sentence structuring**<br>† *range of vocabulary*<br>† *variety in sentence structure*<br>† *appropriateness of vocabulary and sentence structure* |

| Part B – Assessment Criteria |
|---|
| • † **the capacity to select and use relevant information** |
| • **form and organisation**<br>† *observation of the conventions of the discourse form (for example, format, style, cultural appropriateness)*<br>† *linking of related ideas*<br>† *organisation of information from sources into a meaningful sequence* |
| • **effective expression**<br>† *control of the language required to complete the task (appropriateness, clarity of expression, including accuracy in the use of linguistic elements)*<br>† *degree of independence from the wording of the original information* |

www.theallpapers.com

NATIONAL ASSESSMENT FRAMEWORK FOR LANGUAGES AT SENIOR SECONDARY LEVEL

PUBLIC EXAMINATION

# 2001 TAMIL

| | |
|---|---|
| STUDENT/ REGISTRATION NUMBER | |
| CENTRE NUMBER | |
| STATE/ TERRITORY | |

Pages: 6

## EXTENDED LEVEL

## Paper 3: Discussing a Theme

**Tuesday 23 October**

Time: 30 minutes

*Approved English–Tamil/Tamil–English or monolingual dictionaries may be used.*

**Instructions to Candidates**

1. Write your response to the task in Paper 3 in this booklet in ink or ball-point pen. Space is provided for you to make notes.
2. Make sure that you write your student/registration number, State or Territory in which the examination is taken, and centre number (if required) on the front cover of this booklet.
3. Candidates in South Australia and the Northern Territory must respond in English.
4. All question booklets will be collected at the end of the examination.
5. The assessment criteria for this paper are printed on the back page of this booklet.

This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the Senior Certificate (Queensland), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).

*© Victorian Curriculum and Assessment Authority 2001*

www.theallpapers.com

## Discussing a Theme

உமக்குத் தரப்பட்ட வினாக்களில் ஒன்றைமட்டும் (ஒரு விடயம் பற்றி மட்டுமே) தெரிவு செய்து குறைந்தது 250 சொற்களில் உமது விடையைத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதுக. (தென்அவுஸ்திரேலியா, வட மாநிலம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் மட்டும் விடையளிக்க வேண்டும்.) உமது விடை வருடம் முழுவதும் நீர் கற்ற வளங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். நீர் ஓர் எழுத்து வடிவில் உள்ள வளத்தில் பெற்ற தகவல்களையும், ஒரு வாய்மொழி வடிவில் உள்ள வளத்தில் பெற்ற தகவல்களையும் அடிப்படையாகவோ, அல்லது இரண்டு எழுத்து வடிவில் உள்ள வளத்தில் பெற்ற தகவல்களை அடிப்படையாகவோ, கொண்டு எழுதவேண்டும். விடை எழுத உதவிய வளங்களை கீழே தரப்பட்ட இடத்தில் பட்டியல் படுத்துக.

*Choose ONE of the following tasks (from ONE theme only) and write a response of a minimum of 250 words in either English or Tamil. CANDIDATES IN SOUTH AUSTRALIA AND THE NORTHERN TERRITORY MUST ANSWER IN ENGLISH. Your response should be based on resources you have studied through the year, and you must refer to either one written resource and one oral resource, or two written resources, in your answer. List these resources in the space provided.*

**தமிழ் சமுதாயத்தில்பெண்களின் மாறிவரும் நிலை/*Changing Role of Women in Tamil Society***

1. பல தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்ப்பெண்களின் உரிமைக்காகப் போராடியுள்ளனர். அவர்களின் கனவு நனவாகியதா என்பது பற்றி பெண்கள் பத்திரிகை ஒன்றிற்கு கட்டுரை ஒன்று எழுத முன்வந்துள்ளீர். இது பற்றிய உமது சிந்தனைகளையும் கருத்துக்களையும் நீர் படித்த இரண்டு வளங்களைக் குறிப்பிட்டு 250 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

   *Many Tamil writers have campaigned for Tamil women's rights. Do you think their dreams have come true? Write an article for a Tamil women's magazine expressing your thoughts and views on this matter. Your article must be at least 250 words in length and you must refer to two resources you have studied.*

அல்லது/*OR*

2. 'தமது பாரம்பரிய பண்பாட்டு வழக்கங்கள் சிலவற்றை தமிழ்ப்பெண்கள் மீண்டும் பின்பற்றும் காலம் வந்துவிட்டது', என்ற கருத்தை ஒருவர் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார். இவ்விடயத்தில் ஆர்வமுள்ள ஓர் இளைஞராக நீர் இருப்பதால், இந்தக் கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்கு சர்பாகவோ அல்லது எதிராகவோ நீர் கொண்டுள்ள கருத்துக்களை, பத்திரிகை ஆசிரியருக்கு எழுதத் தீர்மானித்துள்ளீர். இக் கடிதத்தை நீர் படித்த இரண்டு வளங்களைக் குறிப்பிட்டு 250 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

   *A writer to a Tamil newspaper has expressed the view that it is time that Tamil women begin again to observe some of their cultural practices that have been there for generations. As an interested young person, you have decided to respond to this article in a letter to the editor either agreeing or disagreeing with this view. Write your response in at least 250 words, based on two resources you have studied.*

அல்லது/*OR*



www.theallpapers.com

**தமிழர் கொண்டாடும் விழாக்கள்/*Festivals celebrated by Tamils***

3. ‘தமிழ் விழாக்கள் பலதிறப்பட்டவையும், மிகவும் மகிழ்வூட்டும் தன்மை வாய்ந்தவையும் ஆகும்.’ இக்கூற்றை ஆதரிக்கும் வகையில், நான்கு அல்லது ஐந்து உதாரணங்களுடன் கூடிய ஒரு பேச்சினை நீர் படித்த இரண்டு வளங்களைக் குறிப்பிட்டு 250 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

*‘Tamil festivals are rich and varied.’ Write the script of a speech in at least 250 words, providing four or five examples to support this statement. Your speech must make reference to two resources you have studied.*

அல்லது/*OR*

4. நீர் ஒரு தமிழ் கலாசாரக்குழுவில் ஆர்வமாகக் கடமையாற்றும் அங்கத்தவராக உள்ளீர். பல்லினப் பத்திரிகை ஒன்றிற்கு ‘தமிழரால் கொண்டாடப்படும் விழாக்கள்’ என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரைத் தொடர் எழுத உள்ளீர். உமது முதல் கட்டுரையில் இரு முக்கிய தமிழ் விழாக்களைப் பற்றி எழுதத் தீர்மானித்துள்ளீர். இவ் விழாக்களின் முக்கியத்துவம் என்ன, இவை இன்று எவ்வாறு கொண்டாடப்படுகின்றன என்பவற்றை விளக்கி, உமது கட்டுரையை எழுதப் போகிறீர். உமது கட்டுரையை நீர் படித்த இரண்டு வளங்களைக் குறிப்பிட்டு 250 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

*You are an active member of a Tamil cultural group and you wish to write a series of articles for a multicultural magazine about festivals celebrated by Tamils. In your first article, you write about two important Tamil festivals, explaining their significance and how they are celebrated by Tamils today. Write your article in at least 250 words, with the help of two resources you have studied.*



www.theallpapers.com

செயற்பாட்டு இல/*Task No.*:

உதவியாகக் கொண்ட வளங்களாவன/*The resources referred to are*:



www.theallpapers.com

www.theallpapers.com

www.theallpapers.com

# 2001 TAMIL

## EXTENDED LEVEL

## Paper 3: Discussing a Theme

| Assessment Criteria |
|---|
| • understanding and appreciation of the works<br>• depth of treatment<br>• content relevant to the demands of the task<br>• appropriate and effective use of structure<br>• accuracy and variety of language use |

www.theallpapers.com